### பழமொழி ஆகமம் 16:3

உன் செயல்களை ஆண்டவருக்குத் திறந்து காட்டினால் உன் சிந்தனைகள் சீர்ப்படுத்தப்படும்.

### எரேமியாஸ் ஆகமம் 29:11

ஏனெனில் நாம் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் நமக்குத் தெரியும்; அவை உங்களுக்கு வளமான பிற்காலத்தையும் நம்பிக்கையையும் தரும்படி நாம் கொண்ட சமாதானத்தின் எண்ணங்களே தவிர, துன்பத்தின் எண்ணங்கள் அல்ல.

### சங்கீதங்கள் 19:4

உன் இதயம் விரும்பியதை உனக்கு அருள்வாராக: உன் கருத்தையெல்லாம் நிறைவேற்றுவாராக.

### லூக்காஸ் 14:28

" உங்களுள் யாராவது கோபுரங்கட்ட விரும்பினால் வேலையை முடிக்கத் தன்னால் முடியுமாவென்று பார்ப்பதற்கு, முதலில் உட்கார்ந்து, வேண்டிய செலவைக் கணிக்க மாட்டானா?

### பழமொழி ஆகமம் 16:9

மனிதனுடைய இதயம் தன் வழியைச் சீர்ப்படுத்துகின்றது. ஆனால், கடவுள்தாமே அவனுடைய அடிச் சுவடுகளை நடத்துகிறவர்.

### சங்கீதங்கள் 142:8

உமதருளை நான் விரைவாய்க் கண்டடையச் செய்யும்: ஏனெனில் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன். எவ்வழியில் நடப்பதென எனக்கு அறிவித்தருளும்: ஏனெனில் உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகிறேன்.

### பழமொழி ஆகமம் 15:22

ஆலோசனை எங்கே இல்லையோ அங்கே சிந்தனைகள் சிதைந்துபோகின்றன. சிந்திப்போர் எங்கே அதிகமோ அங்கே (சிந்தனைகள்) வலுப்படுகின்றன.

பழமொழி ஆகமம் 19:21

மனிதனின் இதயத்தில் சிந்தனைகள் பலவாம். ஆண்டவர் திருவுளமோ நிலைபெற்றிருக்கும்.

சங்கத்திருவுரை ஆகமம் 3:1

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு; வானத்தின்கீழ் நிகழ்வனவெல்லாம் அதற்குக் குறிக்கப்பட்ட கெடுவின்படி நடக்கின்றன. பிறக்க ஒரு காலமுண்டு;

பழமொழி ஆகமம் 23:4

நீ செல்வந்தனாகும் நோக்கத்தோடு உழைக்காதே. ஆனால், உன் கவலைக்கு ஓர் எல்லை இடு.

இசையாஸ் ஆகமம் 28:29

சேனைகளின் கடவுளான ஆண்டவரின் போக்கும் இதுவே; அவ்வாறு அவர் அறிவை விளங்கச் செய்கிறார், அவர் ஞானம் தலைசிறந்ததெனக் காட்டுகிறார்.

இசையாஸ் ஆகமம் 55:8

நம்முடைய எண்ணங்கள் உங்கள் எண்ணங்களல்ல, நம்முடைய வழிகள் உங்கள் வழிகளல்ல, என்கிறார் ஆண்டவர்.

சங்கீதங்கள் 89:12

உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு, எங்கள் வாழ்நாளைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும்.

இசையாஸ் ஆகமம் 55:9

மண்ணிலிருந்து விண் மிக உயர்ந்திருப்பது போல் உங்கள் வழிகளை விட நம்முடைய வழிகளும், உங்கள் எண்ணங்களை விட நம்முடைய எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

ஆமோஸ் 3:7

தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்கும் தம் மறைபொருளை வெளிப்படுத்தாமல், ஆண்டவராகிய

இறைவன் ஏதும் செய்வதில்லை.

பழமொழி ஆகமம் 3:31-32

அநீதனைக் கண்டுபாவியாதே. அவன் வழிகளையும் பின்பற்றாதே. ஏனென்றால், சூதுள்ளவன் எவனோ அவன் ஆண்டவருக்கு அருவருப்பாய் இருக்கிறான். நேர்மையாளரோடுதான் அவர் உரையாடுவார்.